# நிதிக்கணக்கீட்டு அடிப்படை

## [AA11]

### அத்தியாயம் 02ற்கான கையேடு

# மூலப் பதிவு ஏடுகள்

இந்த கையேடானது 2019 ஜனவரியிலிருந்தான
பரீட்சைக்கு பரீட்சிக்கப்படும். பாடப்புத்த கத்திலுள்ள
இவ் அத்தியாயமானது 2019 ஜனவரி மாதத்திலிருந்தான
பரீட்சைக்கு பயனற்றது

அத்தியாயம்

# 02

# மூலப் பதிவு ஏடுகள்

**அத்தியாய அறிமுகம்**

இவ் அத்தியாயமானது வியாபார ஊடுசெயல்களின் ஆரம்பநிலை மற்றும் அவ் ஊடுசெயல்கள் சம்பந்தப்பட்ட மூல ஆவணங்களில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டது அல்லது சேகரிக்கப்பட்டது என்பதையும் ஆராய்கின்றது. ஊடுசெயல்களின் கணக்கீட்டு தகவல்களை மூல ஆவணங்களில் பதிவு மேற்கொள்வது அல்லது சேகரிப்பது கணக்கீட்டு செயன்முறையின் முதற்படி உனக் கருதப்படுகின்றது. ஆகவே ஊடுசெயல்களை பொருத்தமான முதற்பதிவு ஏட்டில் பதிவு செய்வதற்கு குறிப்பிட்ட மூல ஆவணங்களை அடையாளம் காணவேண்டியது அவசயமாகும். முழுப் பாடத்திட்டத்தில் இவ் அத்தியாயத்தின் நிறை ஐந்து (5%) வீதமாகும். மற்றும் நீங்கள் அந்த விகிதத்தில் பரீட்சிக்கப்படுவீர்கள்.

# கற்கை விளைவுகள்

**ஏவ்வொரு தலைப்பு முடிவிலும் நீங்கள் செய்யக்கூடியது:**

- ஒரு வியாபார ஊடுசெயலை அடையாளம் காணல்.
- வியாபார ஊடுசெயல்களின் வெவ்வேறு விதமான மூல ஆவணங்களை அடையாளம் காணல்.
- ஏனைய ஆதாரமாக உள்ள ஆவணங்களை அடையாளம் காணல்.

# 1 மூல ஆவணங்கள்

வியாபாரமொன்றில் பல்வேறு விதமான ஊடுசெயல்கள் இடம்பெறுகின்றது. பொருத்தமான ஊடுசெயல்களை விபரித்து வழங்கப்படும் ஆவணங்களானவை “மூல ஆவணங்கள்” எனப்படும்.

- மூல ஆவணங்களின் வகையானது ஊடு செயல்களின் தன்மைக்கேற்ப வேறுபடுகின்றது.
- இந்த ஆவணங்களிலுள்ள தரவுகளானவை குறிப்பிட்ட ஊடுசெயல்களிற்குரிய முக்கியமான தகவல்களை உள்ளடக்கியுள்ளது.
- ஊடுசெயல்களை மூலப் பதிவு ஏடுகளில் பதிவு செய்வதற்கு மூல ஆவணங்களானவை முக்கியமான தகவல்களை உள்ளடக்கியுள்ளது.
- இந்த ஆவணங்களானவை குறிப்பிட்ட நடவடிக்கையுடன் தொடாபுடைய குறைபாடுகள், வழுக்கள், தவறான செயற்பாடுகள் மற்றும் ஒத்ததன்மையன்மை ஆகியவற்றை கண்டுபிடிப்பதற்கு பயன்படுத்தப்படுவதுடன் குறிப்பிட்ட ஊடுசெயல் இடம்பெற்றதற்கான சான்றாக அமைகின்றது.
- மூல ஆவணங்களானவை குறிப்பிட்ட ஊடுசெயலின் பெறுமதியை உறுதிசெய்வற்கு துணையாக அமைகின்றது.

## 1.1 மூல ஆவணங்களின் முக்கியத்துவம் பின்வருமாறு:

- கணக்கீட்டுப் பதிவினை பதிவு செயவதற்கான அடிப்படையாக மூல ஆவணங்களை பயன்படுத்தல்.
- ஊடுசெயலுடன் தொடர்புடைய சகல பொருத்தமான தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடிதல்.
- ஊடுசெயல் இடம்பெற்றதற்கான ஒரு ஆவணச் சான்றாக பயன்படுத்த முடிதல்.
- மூல ஆவணத்தை சான்றுப்படுத்தய அதிகாரி அதற்கு பொறுப்புடையவராவார்.

மூல ஆவணங்களின் அடிப்படையிலும் ஊடுசெயல்களின் தன்மையின் அடிப்படையிலும் வியாபாரத்தினால் பயன்படுத்தப்படும் மூலப் பதிவு ஏடுகள் பின்வருமாறு;

0 பெறுகைச் சீட்டு

0 கொடுப்பனவு சீட்டு

0 சிறு செலவுக் கைச்சாத்து

0 கொள் முதல் சிட்டை

0 வெளித்திருப்பல் சிட்டை (கொள் வனவுத்திரும்ப சிட்டை)

0 விற்பனைச் சிட்டை

0 உட்திரும்பல் சிட்டை (விற்பனைத் திரும்பல் சிட்டை)


0 பொது நாட்குறிப்பு

## 1.2 மூலப்பதிவு ஏட்டின் முக்கியத்துவம்

- ஒருமித்த ஊடுசையல்களானவை ஒரே ஒட்டில் பதிவு செய்யப்படுவதுடன் பேரேட்டில் பதிவு செய்தல் இலகுவானதாகும்.
- மறதி மற்றும் விடுபடல் வழுக்கள் குறைவடைதல்.
- பதிவுகளை பதிவு செயதலின் போதான வழுக்களை விரைவாக அடையாளம் காண முடிவதுடன் தீர்த்துக் கொள்ள முடிதல்.
- வியாபார ஊடுசெயல்களை சிறந்த கடடுப்பாட்டுடன் நடாத்தி செல்லமுடிதல்.
- முதன்மை பதிவு ஏட்டில் வெவ்வேறு அலுவலக அதிகாரிகள் பதிவுசெயவதனால் கணக்கீட்டு நடவடிக்கைகள் இலகுவாக அமைதல்.

## 1.3 மூலப் பதிவு ஏடுகளும் மூல ஆவணங்களும்

| | ஊடுசையல் | மூல ஆவணம் | மூலப் பதிவு ஏடு |
|---|---|---|---|
| 1 | காசோலை பெறுவனவு மற்றும் காசூ வைப்பு | பற்றுச்சீட்டு | காசுப் பெறுவனவு நாட்குறிபபு |
| 2 | காசோலை கொடுப்பனவு | கொடுப்பனவு சிட்டை / கைச்சாதது | காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பு |
| 3 | வியாபாபரத்தின் தன்மையின் அடிப்படையலமைந்த சிறு செலவுக்காசுக் கொடுப்பனவு | சிறு செலவுக் கைச்சாத்து | சிறு செலவுக் கைச்சாத்து நாட்குறிப்பு |
| 4 | கடனடிப்படையிலான கொள்வனவு | கொன்வனவுப்பட்டியல் | கொள்வனவு நாட்குறிப்பு |
| 5 | வெளித்திருப்பம் | வரவுத்தாள் | வெளித்திருப்பல் நாட்குறிப்பேடு |
| 6 | கடனடிப்படையிலான விற்பனை | விற்பனைப்பட்டியல் | விற்பனை நாட்குறிப்பேடு |
| 7 | உட்திருப்பம் | செலவுத்தாள் | உட்திரும்பல் நாட்குறிப்பேடு |
| 8 | ஏனைய மூலப்பதிவேட்டில் பதியப்படாத ஊடுசெயல்கள் | நாட்குறிப்புக கைச்சாத்து | பொது நாட்குறிப்பேடு |



- சகல காசுக் பெறுவனவுகளையும் முதன் முதலில் பதிவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் மூலப் பதிவு ஏடு காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடாகும்.
- காசுப் பெறுவனவிற்குரிய மூல ஆவணம் “பற்றுச்சீட்டு” ஆகும்.
- வெவ்வேறு விதமான காசுக் கொடுப்பனவுகளையும் முதலில் பதிவு செய்யும் மூலப் பதிவு ஏடு காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடாகும்.
- காசுக் கொடுப்பனவிற்குரிய மூல ஆவணம் “காசுக் கொடுப்பனவு கைச்சாத்து” ஆகும்.
- ஒரு வியாபாரத்தின் சகல காசு ஊடுசெயல்களையும் காசுப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு நாளேட்டில் பதிவு செய்ததின் பின்னர் இரட்டைப் பதிவுத் தத்துவத்தின் அடிப்படையில் அவ் ஊடுசெயல்கள் பொதுப் பேரேட்டிற்கு தாக்கல் செய்யப்படும்.

FAB

Association of Accounting Technicians of Sri Lanka

காசுப் பெறுவனவு நாளேட்டின் நிரல்களின் மொத்தம் பின்வரும் முறையில் பொதுப் பேரேட்டில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

| கொடுத்த கழிவு நிரல்களின் மொத்தம் | கொடுத்த கழிவு கணக்கு | வரவு | கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு | செலவு |
|---|---|---|---|---|
| ஒவ்வோரு நிரல்களினதும் மொத்த பெறுமதி | காசுக் கட்டுப்பாட்டு கணக்கு | வரவு | | |
| காசு விற்பனை நிரலின் மொத்தம் | | | விற்பனை கணக்கு | செலவு |
| கடன்பட்டோரிடமிருத்தான பெறுவனவு நிரலின் மொத்தம் | | | கடன்பட்டோர் கட்டிப்பாட்டுக் கணக்கு | செலவு |
| வருமான நிரலின் மொத்தம் | | | உரிய வருமானக் கணக்கு | செலவு |
| ஏனைய வருமான நிரலின் மொத்தம் | | | உரிய பெறுவனவுக் கணக்கு | செலவு |

காசுக் கொடுப்பனவு நாளேட்டின் நிரல்களின் மொத்தம் பின்வரும் முறையில் பொதுப் பேரேட்டில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

| பெற்ற கழிவு நிரல்களின் மொத்தம் | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | வரவு | பெற்ற கழிவு கணக்கு | செலவு |
|---|---|---|---|---|
| காசுக் கொன்வனவு நிரலின் மொத்தம் | கொள்வனவு கணக்கு | வரவு | | |
| கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு நிரலின் மொத்தம் | கடன்கொடுத்தோர் கட்டுப்பட்டு கணக்கு | வரவு | | |
| செலவின நிரலின் மொத்தம் | உரிய செலவினக் கணக்கு | வரவு | | |
| ஏனைய கொடுப்பனவு நிரல்களின் மொத்தம் | ஒவ் வொரு உரிய கணக்கு | வரவு | | |
| ஒவ்வொரு நிரல்களினநும் மொத்த பெறுமதி | | | காசுக் கணக்கு | செலவு |

## 1.4 காசுக் பெறுவனவு நாட்குறிப்பேடு மற்றும் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு

வணிகமொன்றுடன் தொடர்புடைய ஊடுசெயல்கள் காசுக் பெறுவனவு மற்றும் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பில் பதிவு செய்யப்படுவதுடன் அவற்றின் நிரல்களின் மொத்தமானது சகல மாத இறுதியிலும் பெறப்படுகின்றது.

### காசுக் பெறுவனவு நாட்குறிப்பேடு / பெறுவனவு நாட்குறிப்பேடு

| திகதி | பற்றுச் சீட்டு இல | விபரம் | கொடுத்த கழிவு (ரூபா.) | பெறுமானம் (ரூபா.) | பகுப்பாய்வு நிரல்கள் (ரூபா.) | | | | பே. ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உடன் காசு விற்பனை | கடன் பட்டோரிடம் பெறுவனவு | வருமானங்கள் | ஏனைய பெறுவனவுகள் | |
| | | | | | | | | | |
| | | | XX | XXX | XX | XX | XX | XXX | |
| | | | (1) | | (2) | (3) | (4) | (5) | |

### காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு / கொடுப்பனவு நாட்குறிப்பேடு

| திகதி | கைச்சாத்து இல | விபரம் | பெற்ற கழிவு (ரூபா.) | பெறுமானம் (ரூபா.) | பகுப்பாய்வு நிரல்கள் (ரூபா.) | | | | பே. ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கடன் காசுக் கொள்வனவு | கடன் கொடுத் தோருக்கான கொடுப்பனவு | செலவுகள் | ஏனைய கொடுப்பனவுகள் | |
| | | | | | | | | | |
| | | | XX | XXX | XX | XX | XX | XXX | |
| | | | (6) | | (7) | (8) | (9) | (10) | |

மேலே தயாரிக்கப்பட்ட காசுக் பெறுவனவு நாட்குறிப்பேட்டினதும் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டினதும் ஊடு செயல்கள் பின்வரும் முறைக்கமையவே பொதுப் பேரேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

### காசுக் கணக்கு / காசுக் கட்டுப்பாட்டு கணக்கு

(ரூபா.)

| | | | |
|---|---|---|---|
| மீ/கீ/கொ/வ | XX | (7) கொள்வனவுகள் | XX |
| (2) விற்பனைகள் | XX | (8) கடன்கொடுநா கட்டுப்பாட்டுக் கணக்கு | XX |
| (3) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | XX | (9) செலவுகள் | XX |
| (4) ஏனைய வருமான கணக்கு | XX | (10) ஏனைய கொடுப்பனவுகள் | XX |
| (5) ஏனைய பெறுவனவுகள் கணக்கு | XX | மீ/கீ/கொ/செ | XX |
| | XXX | | XXX |
| மீ/கீ/கொ/வ | XX | | |

**அல்லது**

### காசுக் கணக்கு / காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

(ரூபா.)

| | | | |
|---|---|---|---|
| மீ/கீ/கொ/வ | XX | காசுக் கொடுப்பனவுகள் | XX |
| காசுப் பெறுவனவுகள் | XX | மீ/கீ/கொ/செ | XX |
| | XXX | | XXX |
| மீ/கீ/கொ/வ | | | |

**கொடுத்த கழிவுக் கணக்கு (ரூபா.)**

| | |
|---|---|
| (1) கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு XX | |

**விற்பனைக் கணக்கு (ரூபா.)**

| | |
|---|---|
| | (2) காசுக் கணக்கு XX |

**கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு (ரூபா.)**

| | |
|---|---|
| மீ/கீ/கொ/வ XX | (1) கொடுத்த கழிவுக் கணக்கு XX |
| | (3) காசுக் கணக்கு XX |

**வருமானக் கணக்கு (ரூபா.)**

| | |
|---|---|
| | (4) காசுக் கணக்கு XX |



Association of Accounting Technicians of Sri Lanka

**பெற்ற கழிவுக் கணக்கு (ரூபா.)**

| | |
|---|---|
| | (6) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு XX |

**கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு (ரூபா.)**

| | |
|---|---|
| (6) பெற்ற கழிவுக் கணக்கு XX | மீ/கீ/கொ/வ XX |
| (8) காசுக் கணக்கு XX | |

**கொளடவனவுக் கணக்கு (ரூபா.)**

| | |
|---|---|
| (7) காசுக் கணக்கு XX | |

**வங்கிக்கடன் கணக்கு (ரூபா.)**

| | |
|---|---|
| (10) காசுக் கணக்கு XX | (5) காசுக் கணக்கு XX |

**சம்பளக் கணக்கு (ரூபா.)**

| | |
|---|---|
| (9) காசுக் கணக்கு XX | |

## Q வினா

கமல் வியாபாரத்தின் 2018 ஏப்ரல் மாதத்திற்கான காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்புடைய கொடுக்கல் வாங்கலகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | | ரூபா. |
|---|---|---|---|
| 05.04.2018 | காசு விற்பனைகள் | (ப.சீ. இல 01) | 50,000 |
| 10.04.2018 | பெற்ற கட்டடவாடகை | (ப.சீ. இல 02) | 10,000 |
| 15.04.2018 | பெற்ற வங்கிக்கடன் | (ப.சீ. இல 03) | 100,000 |
| 18.04.2018 | கடன்படுநரான அமலிடம் பெற்றது | (ப.சீ. இல 04) | 8,000 |
| | கொடுத்த காசுக் கழிவு | | 500 |
| 20.04.2018 | காசு விற்பனைகள் | (ப.சீ. இல 05) | 60,000 |
| 22.04.2018 | கடன்படுநடரான ருவானிடம் பெற்றது | (ப.சீ. இல 06) | 47,500 |
| | ருவானுக்கு கொடுத்த காசுக் கழிவு | | 2,500 |
| 25.04.2018 | பெற்ற தரகுகள் | (ப.சீ. இல 07) | 2,000 |
| 28.04.2018 | மேலதிக மூலதனம் ஈடுபடுத்தியது | (ப.சீ. இல 08) | 50,000 |

## A விடை

காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு / பெறுவனவு நாட்குறிப்பேடு

| திகதி | பற்றுச் சீட்டு இல | விபரம் | கொடுத்த கழிவு (ரூபா.) | பெறுமானம் (ரூபா.) | பகுப்பாய்வு நிரல்கள் (ரூபா.) | | | | பே. ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | காசு விற்பனை | கடன் பட்டே-ாரிடம் பெறுவனவு | வருமான ங்கள் | ஏனைய பெறுவன வுகள் | |
| 5 ஏப்ரல் | 01 | விற்பனைகள் | | 50,000 | 50,000 | | | | |
| 10 ஏப்ரல் | 02 | கட்டடவாடகை | | 10,000 | | | 10,000 | | |
| 15 ஏப்ரல் | 03 | வங்கிக்கடன் | | 100,000 | | | | 100,000 | |
| 18 ஏப்ரல் | 04 | அமல் | 500 | 8,000 | | 8,000 | | | |
| 20 ஏப்ரல் | 05 | விற்பனைகள் | | 60,000 | 60,000 | | | | |
| 22 ஏப்ரல் | 06 | ருவன் | 2,500 | 47,500 | | 47,500 | | | |
| 25 ஏப்ரல் | 07 | பெற்ற தரகு | | 2,000 | | | 2,000 | | |
| 28 ஏப்ரல் | 08 | மூலதனம் | | 50,000 | | | | 50,000 | |
| | | | **3,000** | **327,500** | **110,000** | **55,500** | **12,000** | **150,000** | |

## Q வினா

கமல் வியாபாரத்தின் 2018 ஏப்ரல் மாதத்திற்கான காசுக் கொடுப்பனவுகள் மற்றும் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் கீழேதரப்பட்டுள்ளன. இக் கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு நாட்குறிப்பை தயாரிக்குக.

| | | | |
|---|---|---|---|
| 06.04.2018 | மாதாந்த மின்கட்டணக் கொடுப்பனவு | (கை.இ. 01) | 8,000 |
| 08.04.2018 | கடன்கொடுத்தோர் பெரேராவுக்கான கொடுப்பனவு | (கை.இ. 02) | 12,500 |
| | பெற்ற காசுக் கழிவு | | 1,500 |
| 10.04.2018 | காசுக் கொள்வனவுகள் | (கை.இ. 03) | 17,000 |
| 12.04.2018 | மாதாந்த காப்புறுதிக் கொடுப்பனவு | (கை.இ. 04) | 12,000 |
| 14.04.2018 | கடன்கொடுத்தோர் சாகரவுக்கான கொடுப்பனவு | (கை.இ. 05) | 17,000 |
| | பெற்ற காசுக் கழிவு | | 2,000 |
| 16.04.2018 | அலுவலகத் தளபாடக் கொள்வனவு | (கை.இ. 06) | 60,000 |
| 18.04.2018 | சட்பளமும் கூலியும் கொடுப்பனவு | (கை.இ. 07) | 20,000 |
| 20.04.2018 | வங்கிக்கடன் மீளச்செலுத்துகை (வட்டி ரூபா. 2,000) | (கை.இ. 08) | 12,000 |
| 22.04.2018 | காசுக் கொள்வனவுகள் | (கை.இ. 09) | 20,000 |
| 26.04.2018 | காசுப் பற்று | (கை.இ. 10) | 4,000 |

## A விடை

**காசுக் கொடுப்பனவு நாட்குறிபபேடு / கொடுப்பனவு நாட்குறிபபேடு**

| திகதி | கைச் சாத்து இல | விபரம் | பெற்ற கழிவு (ரூபா.) | பெறுமா-னம் (ரூபா.) | பகுப்பாய்வு நிரலகள் (ரூபா.) | | | | பே. ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | காசுக் கொள்வன வுகள் | கடன் கொ-ாடுநருக்கான கொடுப்ப-னவுகள் | செலவு கள் | ஏனைய கொடுப்ப னவுகள் | |
| 6 ஏப்ரல் | 1 | மின்கட்டணம் | - | 8,000 | - | - | 8,000 | - | |
| 8 ஏப்ரல் | 2 | பெரேரா | 1,500 | 12,500 | - | 12,500 | - | - | |
| 10 ஏப்ரல் | 3 | கொள்வனவு | - | 17,000 | 17,000 | - | - | - | |
| 12 ஏப்ரல் | 4 | காப்புறுதி | - | 12,000 | - | - | 12,000 | - | |
| 14 ஏப்ரல் | 5 | சாகர | 2,000 | 17,000 | - | 17,000 | - | - | |
| 16 ஏப்ரல் | 6 | அலுவலக தளபாடம் | - | 60,000 | - | - | - | 60,000 | |
| 18 ஏப்ரல் | 7 | சம்பளமும் கூலியும் | - | 20,000 | - | - | 20,000 | - | |
| 20 ஏப்ரல் | 8 | வங்கிக் கடன் | - | 10,000 | - | - | - | 10,000 | |
| | | கடன் வட்டி | - | 2,000 | - | - | - | 2,000 | |
| 22 ஏப்ரல் | 9 | கொள்வனவு | - | 20,000 | 20,000 | - | - | - | |
| 26 ஏப்ரல் | 10 | பற்று | - | 4,000 | - | - | - | 4,000 | |
| | | | **3,500** | **182,500** | **37,000** | **29,500** | **40,000** | **76,000** | |

## Q வினா

கமல் வியாபாரத்தில் 2018 ஏப்ரல் 01 இல் காணப்பட்ட காசு மீதி ரூ. 25,000 எனக் கருதி காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டிலும் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டிலும் இடம் பெற்ற நடவடிக்கைகளைப் பொதுப் பேரேட்டில் பதிவு செய்க.

## A விடை

**பொதுப் பேரேடு**

**காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு / காசுக் கணக்கு**

| | | (ரூபா.) | | | (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01-ஏப்ரல் | மீ.கி.கொ.வ. | 25,000 | 30-ஏப்ரல் | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | 37,000 |
| 30-ஏப்ரல் | விற்பனைகள் | 110,000 | 30-ஏப்ரல் | கொள்வனவுகள் | 29,500 |
| 30-ஏப்ரல் | கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு | 55,500 | 30-ஏப்ரல் | செலவுகள் | 40,000 |
| 30-ஏப்ரல் | வருமானங்கள் | 12,000 | 30-ஏப்ரல் | ஏனைய கொடுப்பனவுகள் | 76,000 |
| 30-ஏப்ரல் | ஏனைய பெறுவனவுகள் | 150,000 | 30-ஏப்ரல் | மீ.கி.கொ.செ. | 170,000 |
| | | **352,500** | | | **352,500** |
| 1-மே | மீ.கி.கொ.வ. | 170,000 | | | |

அல்லது

**காசுக் கணக்கு** (ரூபா.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01-ஏப்ரல் | மீ.கீ.கொ.வ. | 25,000 | 30-ஏப்ரல் | காசுக் கொடுப்பனவுகள் | 182,500 |
| 30-ஏப்ரல் | காசுப் பெறுவனவுகள் | 327,500 | 30-ஏப்ரல் | மீ.கீ.கொ.செ. | 170,000 |
| | | **352,500** | | | **352,500** |

**விற்பனைக் கணக்கு** (ரூபா.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 30 ஏப்ரல் | காசுக் கணக்கு | 110,000 |

**வங்கிக் கடன் னணக்கு**

| | | (ரூபா.) | | | (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 20 ஏப்ரல் | காசுக் கணக்கு | 10,000 | 15 ஏப்ரல் | காசுக் கணக்கு | 100,000 |

**மூலதனக் கணக்கு**

| | | (ரூபா.) | | | (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | | | 1 ஏப்ரல் | மீ.கீ.கொ.செ. | xxxx |
| | | | 28 ஏப்ரல் | காசுக் கணக்கு | 50,000 |

**கொடுத்த கழிவுக் கணக்கு**

| | | (ரூபா.) | | | (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 30 ஏப்ரல் | கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு | 3,000 | | | |

**பெற்ற கழிவுக் கணக்கு**

| | | (ரூபா.) | | | (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | | | 30 ஏப்ரல் | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | 3,500 |

**கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு**

| | | (ரூபா.) | | | (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | | | 30 ஏப்ரல் | காசுக் கணக்கு | 55,500 |
| | | | | கொடுத்த கழிவுக் கணக்கு | 3,000 |

**கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு**

| | | (ரூபா.) | | | (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 30 ஏப்ரல் | காசுக் கணக்கு | 29,500 | | | |
| | பெற்ற கழிவுக் கணக்கு | 3,500 | | | |

**கட்டிட வாடகை கணக்கு**

| | | (ரூபா.) | | | (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | | | 10 ஏப்ரல் | காசுக் கணக்கு | 10,000 |

**பெற்ற தரகுக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| | | 25 ஏப்ரல் காசுக் கணக்கு | 2,000 |

**கொள்வனவு கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 30 ஏப்ரல் காசுக் கணக்கு | 37,000 | | |

**மின் கட்டணக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 06 ஏப்ரல் காசுக் கணக்கு | 8,000 | | |

**காப்புறுதிக் கட்டணக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 12 ஏப்ரல் காசுக் கணக்கு | 12,000 | | |

**கடன் வட்டி கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 20 ஏப்ரல் காசுக் கணக்கு | 2,000 | | |

**அலுவலக தளபாடக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 16 ஏப்ரல் காசுக் கணக்கு | 60,000 | | |

**பற்றுக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 26 ஏப்ரல் காசுக் கணக்கு | 4,000 | | |

**சம்பளமும் கூலிக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 18 ஏப்ரல் காசுக் கணக்கு | 20,000 | | |

## வங்கி கொடுக்கல் வாங்கல்கள்

- அனேகமான வணிகங்கள் காசு மூல மாக மட்டுமன்றி காசோலைகள் மூலமும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றன.
- காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும் வணிகங்கள் தமது கொடுக்கல் வாங்கல்களினூடாகப் பெற்ற காசு மற்றும் காசோலைகளை வங்கியில் வைப்புச் செயவதுடன், அவற்றை காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்கின்றன.

- காசோலைகள் மூலம் செய்யப்படும் கொடுப்பனவுகள் காசுக் கொடுப்பனவு நாட்குறிப் பேட்டில் பதியப்படும்.
- காசோலைகள் மூலம் கொடுப்பனவுகளைச் செய்யும் அதேவேளை ஏனைய காசு மூலமாக மேற்கொள்ளும் கொடுப்பனவுகள் சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் பதியப்பட்டு சில்லறைக் காசுக் கணக்கில் பதியப்படும்.
- வணிகத்திற்குக் கிடைக்கும் அனைத்து காசு, காசோலை பெறுவனவுகளும் அன்றைய தினமே வங்கியில் வைப்பிலிடப்படும்.

## Q வினா

2018.04.01 இல் அருண ரூ. 600,000 வணிகத்தின் பெயரில் வங்கிக் கணக்கொனறில் வைப்பிலிட்டு விற்பனை வணிகமொனறை ஆரம்பித்தார் ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுன்ளன.

| கொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற திகதி | விபரம் | பற்றுச்சீட்டு இல | கைச்சாத்து இல | காசோலை இலக்கம் | பெறுமானம் (ருகா.) |
|---|---|---|---|---|---|
| 01 ஏப்ரல் | காசுக் கொன்வனவு | | 01 | 900500 | 150,000 |
| 02 ஏப்ரல் | தளபாட உபகரணக கொள்வனவு | | 02 | 900501 | 90,000 |
| 02 ஏப்ரல் | காசு விற்பனை | 02 | | 823631 | 300,000 |
| 03 ஏப்ரல் | மாலாவிடம் கடன்கொள்வனவு | | | | 100,000 |
| 04 ஏப்ரல் | அமலுக்கு கடன் விற்கனை | | | | 150,000 |
| 05 ஏப்ரல் | சில்லறை காசாளருக்கான கொடுப்பனவு | | 03 | 900502 | 20,000 |
| 06 ஏப்ரல் | உட்சுமைக்கூலிக் கொடுப்பனவு | | 04 | 900503 | 15,000 |
| 07 ஏப்ரல் | கயானிடமிருந்து கடன் கொன்வனவு | | | | 80,000 |
| 08 ஏப்ரல் | சத்துரவுக்கு கடன் விற்பனை | | | | 90,000 |
| 08 ஏப்ரல் | மக்கள் வங்கியிடமிருந்து பெற்ற கடன் | 03 | | | 300,000 |
| 09 ஏப்ரல் | மாலாவுக்கு செலுத்தியகாசு, பெற்ற கழிவு 5,000 | | 05 | 900504 | 95,000 |
| 10 ஏப்ரல் | அமலிடம் 10% க் கழிவின் அடிப்படையில் பெற்ற காசு | 04 | | 831814 | 135,000 |
| 12 ஏப்ரல் | காசு விற்பனை | 05 | | காசு | 350,000 |
| 14 ஏப்ரல் | கட்டட வாடகை செலுத்தியது | | 06 | 900505 | 40,000 |
| 15 ஏப்ரல் | காசு கொள்வனவு | | 07 | 900506 | 110,000 |
| 18 ஏப்ரல் | கயானுக்கு செலுத்திய காசு பெற்ற கழிவு 10% | | 08 | 900507 | 72,000 |
| 22 ஏப்ரல் | சத்துரவிடமிருந்து பெற்ற காசு கொடுத்த கழிவு 10% | 06 | | காசு | 81,000 |
| 25 ஏப்ரல் | சம்பளக் கொடுப்பனவு | | 09 | 900508 | 150,000 |
| 26 ஏப்ரல் | அருணவின் பற்று | | 10 | 900509 | 5,000 |
| 28 ஏப்ரல் | பெற்ற தரகு | 07 | | காசு | 6,000 |

மேற்குறிப்பிடப்பட்ட அருண வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களை பெறுவனவு நாட்குறிப்பேடு மற்றும் கொடுப்பனவு நாட்குறிப்பேடு என்பவற்றில் பதிவுசெயது அலற்றில் உள்ளடக்கிய தகவலகளைப் பொதுப் பேரேட்டிலுள்ள கணக்குகளுக்கு மாற்றம் செய்க.

## A விடை

பெறுவனவு நாட்குறிப்பேடு

| திகதி | பற்றுச் சீட்டு இல | விபரம் | காசோலை இல | கொடுத்த கழிவு (ரூபா.) | பெறுமானம் (ரூபா.) | பகுப்பாய்வு நிரல்கள் (ரூபா.) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காசு விற்பனை | கடன் பட்டோர் | ஏகைய வருமானங்கள் | ஏனைய பெறுவனவுகள் |
| 1 ஏப்ரல் | 1 | மூலதனம் | - | - | 600,000 | | - | - | 600,000 |
| 2 ஏப்ரல் | 2 | விற்பனைகள் | 823631 | - | 300,000 | 300,000 | - | - | |
| 8 ஏப்ரல் | 3 | வங்கி கடன் | - | - | 300,000 | | - | - | 300,000 |
| 10 ஏப்ரல் | 4 | அமல் | 731814 | 15,000 | 135,000 | | 135,000 | - | |
| 12 ஏப்ரல் | 5 | விற்பனைகள் | - | - | 350,000 | 350,000 | - | - | |
| 22 ஏப்ரல் | 6 | சத்துர | - | 9,000 | 81,000 | | 81,000 | - | |
| 28 ஏப்ரல் | 7 | பெற்ற தரகு | - | - | 6,000 | | - | 6,000 | |
| | | | **-** | **24,000** | **1,772,000** | **650,000** | **216,000** | **6,000** | **900,000** |

கொடுப்பனவு நாட்குறிப்பேடு

| திகதி | கைச் சாத்து இல | விபரம் | காசோலை இல | பெற்ற கழிவு (ரூபா.) | பெறுமானம் (ரூபா.) | பகுப்பாய்வு நிரல்கள் (ரூபா.) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காசு கொள்வனவு | கடன் கொடுத்தோர் | செலவுகள் | ஏனைய கொடுப்பனவுகள் |
| 1 ஏப்ரல் | 1 | கொள்வனவு | 900500 | - | 150,000 | 150,000 | - | - | - |
| 2 ஏப்ரல் | 2 | தளபாடம் | 900501 | - | 90,000 | - | - | - | 90,000 |
| 5 ஏப்ரல் | 3 | சில்லறைக் காசு | 900502 | - | 20,000 | - | - | - | 20,000 |
| 6 ஏப்ரல் | 4 | உட்சுமைக் கூலி | 900503 | - | 15,000 | - | - | 15,000 | - |
| 9 ஏப்ரல் | 5 | மாலா | 900504 | 5,000 | 95,000 | - | 95,000 | - | - |
| 14 ஏப்ரல் | 6 | கட்டட வாடகை | 900505 | - | 40,000 | - | - | 40,000 | - |
| 15 ஏப்ரல் | 7 | கொள்வனவு | 900506 | - | 110,000 | 110,000 | - | - | - |
| 18 ஏப்ரல் | 8 | கயான் | 900507 | 8,000 | 72,000 | - | 72,000 | - | - |
| 25 ஏப்ரல் | 9 | சம்பளம் | 900508 | - | 15,000 | - | - | 15,000 | - |
| 26 ஏப்ரல் | 10 | பற்று | 900509 | - | 5,000 | - | - | - | 5,000 |
| | | | | **13,000** | **612,000** | **260,000** | **167,000** | **70,000** | **115,000** |

**பொதுப் பேரேடு**

**கொடுத்த கழிவுக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 30 ஏப்ரல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு | 24,000 | | |

**மூலதனக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| | | 01 ஏப்ரல் காசுக் கணக்கு | 600,000 |

**பெற்ற கழிவுக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| | | 30 ஏப்ரல் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | 13,000 |

**விற்பனைக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| | | 30 ஏப்ரல் காசுக் கணக்கு | 650,000 |

**சில்லறைக் காசு கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 05 ஏப்ரல் காசுக் கணக்கு | 20,000 | | |

**வங்கிக்கடன் னணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| | | 08 ஏப்ரல் காசுக் கணக்கு | 300,000 |

**பெற்ற தரகுக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| | | 28 ஏப்ரல் காசுக் கணக்கு | 6,000 |

**கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 30 ஏப்ரல் பெற்ற கழிவு கணக்கு | 13,000 | | |
| 30 ஏப்ரல் காசுக் கணக்கு | 167,000 | | |

**தளபாடக் கணக்கு**

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| | | 02 ஏப்ரல் காசுக் கணக்கு | 90,000 |

### கடன்பட்டோர் கட்டுப்பட்டு கணக்கு

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| | | கொடுத்த கழிவுக் கணக்கு | 24,000 |
| | | காசுக் கணக்கு | 216,000 |

### கொள்வனவு கணக்கு

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 30 ஏப்ரல் காசுக் கணக்கு | 260,000 | | |

### உட்சுமை கூலிக் கணக்கு

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 04 ஏப்ரல் காசுக் கணக்கு | 15,000 | | |

### சம்பளக் கணக்கு

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 25 ஏப்ரல் காசுக் கணக்கு | 15,000 | | |

### கட்டடவாடகை கணக்கு

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 14 ஏப்ரல் காசுக் கணக்கு | 40,000 | | |

### பற்று கணக்கு

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| 26 ஏப்ரல் காசுக் கணக்கு | 5,000 | | |

### காசுக் கணக்கு / காசுக் கட்டுபாட்டு கணக்கு

| | (ரூபா.) | | (ரூபா.) |
|---|---|---|---|
| விற்பனைகள் | 650,000 | கொள்வனவுகள் | 260,000 |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 216,000 | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 167,000 |
| வருமானங்கள் | 6,000 | செலவுகள் | 70,000 |
| ஏனைய பெறுவனவுகள் | 900,000 | ஏனைய கொடுப்பனவுகள் | 115,000 |
| | | மீ.கீ.கொ.செ. | 1,160,000 |
| | **1,772,000** | | **1,772,000** |
| மீ.கீ.கொ.வ. | 1,160,000 | | |

## வினா

ரவின்து வணிகத்தில் வங்கிக் கணக்கின் மூலமே அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறுகின்றன 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியில் வங்கிக் கணக்கு மீதி ரூபா. 1,200,000 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலகள் பின்வருமாறு:

| கொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற திகதி | மூல ஆவண இலக்கம் | விபரம் | காசோலை இலக்கம் | பெறுமானம் (ரூபா. '000) |
|---|---|---|---|---|
| 01 ஏப்ரில் | ப.சீ.இ. 01 | காசு விற்பனை | 245512 | 3,000 |
| 02 ஏப்ரில் | கை.சா.இ. 01 | காசு கொள்வனவு | 461261 | 1,000 |
| 03 ஏப்ரில் | ப.சீ.இ. 02 | சுதத்திடம் பெற்ற காசு | காசு | 500 |
| 04 ஏப்ரில் | கை.சா.இ. 02 | சுரனிக்கு செலுத்தியது | 461262 | 900 |
| 05 ஏப்ரில் | கை.சா.இ. 03 | மின்கட்டணம் செலுத்தியது | 461263 | 300 |
| 06 ஏப்ரில் | ப.சீ.இ. 03 | கட்டட வாடகை வருமானம் | காசு | 400 |
| 08 ஏப்ரில் | ப.சீ.இ. 04 | நாமவிடம் 10% கழிவினடிப்படையில் பெற்றது | 125214 | 360 |
| 10 ஏப்ரில் | கை.சா.இ. 04 | சுகததுக்கு 10% கழிவின் மீது செலுத்தியது | 461264 | 180 |
| 12 ஏப்ரில் | கை.சா.இ. 05 | ஊழியர் சம்பளம் கொடுத்தது | 461265 | 120 |
| 14 ஏப்ரில் | கை.சா.இ. 06 | மோட்டார் வண்டிக் கொள்வனவு | 461266 | 2,750 |
| 15 ஏப்ரில் | கை.சா.இ. 05 | வங்கிக்கடன் பெறல் | காசு | 3,500 |
| 18 ஏப்ரில் | | நாரலிடம் பெற்று வைப்பிலிட்ட காசோலை மறுக்கப்பட்டது என வங்கி அறிவித்தல் | 236325 | 360 |
| 20 ஏப்ரில் | ப.சீ.இ. 06 | காசு விற்பனை | காசு | 3,300 |
| 22 ஏப்ரில் | கை.சா.இ. 07 | சத்துரவுக்கு 10% கழிவுக்கு பின் செலுத்தியது | 461267 | 450 |
| 24 ஏப்ரில் | | மின்கட்டணத்தினிற்காக செலுத்திய காசோலை பிழையாக எழுதப்பட்டமையால் திருப்பி அனுப்பட்டல் | 461263 | 300 |
| 26 ஏப்ரில் | ப.சீ.இ. 03 | ரவின்து பற்றியது | 461268 | 100 |
| 28 ஏப்ரில் | கை.சா.இ. 08 | காசு கொள்வனவு | 461269 | 1,200 |
| 29 ஏப்ரில் | ப.சீ.இ. 07 | ஜனித்திடம் பெறப்பட்டது | 138146 | 350 |
| 30 ஏப்ரில் | கை.சா.இ. 10 | மின்கட்டணச் செலவுகள் | 461270 | 300 |

**வேண்டப்படுவது:**

1. ரவின்து வணிகத்தின் 2018 ஏப்ரல் மாதத்திற்கான பெறுவனவு நாட்குறிப்பேடு மற்றும் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு என்பனவற்றைத் தயாரிக்கவும்.

2. பெறுவனவு மற்றும் கொடுப்பனவு நாட்குறிப்பேடுகளின் தகவல்களைப் பயன்படுத்திக் காசுக் கணக்கினைத் தயாரிக்குக.

- கடன்பட்டேரிடமிருந்து பெற்ற காசோலையொன்று வங்கியில் வைப்பிலிடப்பட்டதன் பின்னர் மறுக்கப்படுமாயின் அதற்கான மூலபப்திவுகள் பொதுக்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படல் வேண்டும்.
- இங்கு கடன்பட்டோருக்கு கழிவு வழங்கப்பட்டிருப்பன் அக்கழிவினை இரத்துச் செய்தல் வேண்டும்.
- இதற்கமையப் பின்வரும் பதிவுகளை பொதுநாட்குறிபபேட்டில் பதிவு செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | வரவு | XXXXXX | |
| கொடுத்த கழிவுக் கணக்கு | செலவு | | XXXXXX |
| காசுக் கணக்கு | செலவு | | XXXXXX |
| *(காசோலை மறுக்கப்படுதலும் கொடுத்த கழிவு இரத்துச் செய்யப்படுதலும்)* | | | |

- கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்று மறுக்கப்படுமாயின் அதற்கான மூலப்பதிவுகள் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்.
- கடன்கொடுத்தோரிடம் கழிவு பெறப்பட்டிருப்பின் அக்கழிவினை இரத்து செய்தல் வேண்டும். இதற்கமைய பின்வரும் பதிவுகளை பொது நாட்குறிபபேட்டில் பதிவு செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| காசுக் கணக்கு | வரவு | XXXXXX | |
| பெற்ற கழிவுக் கணக்கு | வரவு | XXXXXX | |
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | செலவு | | XXXXXX |
| *(காசோலை மறுக்கப்படுதலும் பெற்ற கழிவு இரத்து செய்யப்படுதலும்)* | | | |

- செலவொன்றிற்காக வணிகத்தினால் வழங்கப்பட்ட காசோலையொன்று மறுக்கப்படுமாயின் அதனைப் பின்வருமாறு பொதுநாட்குறிப்பேட்டில் பதிவு செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| காசுக் கணக்கு | வரவு | XXXXXX | |
| அட்டுறுச் செலவுக் கணக்கு / செலவுக் கணக்கு | செலவு | | XXXXXX |
| *(செலவுக்காக வழங்கிய காசோலை மறுக்கப்படல்)* | | | |

## 1.5 சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு

வணிகமொன்றில் இடம்பெறுகின்ற குறைந்த பெறுமதியுடைய கொடுப்பனவுகளை பதிவு செய்வதற்கு சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு பயன்படுத்தப்படுகின்றது.

| கொடுக்கல் வாங்கல்கள் | ரூபா. |
|---|---|
| இருப்புக்கள் கொள்வனவு | 12,000 |
| உபசரிப்புச் செலவு | 60 |
| முத்திரை, கடிதவுறை வாங்கியது | 30 |
| சம்பளம் கொடுத்தது | 8,000 |
| கோப்புக்கள் வாங்கியது | 20 |
| பேனை வாங்கியது | 12 |
| தளபாடம் வாங்கியது | 55,000 |
| போக்குவரத்து செலவு செலுத்தியது | 120 |

- வணிகமொன்றில் மிகவும் குறைந்த பெறுமதியுடைய சில கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன.
- சில உதாரணங்களாவன;
  - உபசரிப்புச் செலவுகள்
  - முத்திரை மற்றும் கடிதவுறைக் கொடுப்பனவுகள்
  - கோப்புக்கள் வாங்கியது
  - பேனை வாங்குவதற்கு செலவு செய்த தொகை
  - போக்குவரத்து செலவு செலுத்தியது
- இவ்வாறான குறைந்த பெறுதியுடைய கொடுப்பனவுகள் சில்லறைக் கொடுப்பனவுகள் என அடையாளம் காணப்படும்.
- வணிகமொன்றில் நாளாந்தம் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களில் சிறிய பெறுமதிகளைக் கொண்ட கொடுக்கல் வாங்கலகளை இனங்கணடு அவற்றைத் தனியான மூல ஏடொன்றில் பதிவு செய்யப்பட வேண்டும். அம்மூல ஏடானது சில்லறைக் காசு கொடுப்பனவு நாட்குறிப்பேடு எனப்படும்.
- சில்லறைக் காசோட்டில் கொடுக்கல் வாங்கலகளைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மூல ஆவணம் சில்லறைக் காசு கைச்சாத்துக்கள் ஆகும்.
- சில்லறைக் காசுக் கொடுப்பனவிற்காக ஏற்படக்கூடிய மொத்த பெறுமதியானது முற்கூட்டியே தீர்மானிக்கப்படுவதுடன் அத் தொகையானது பிரதம காசாளரால் சில்லறைக் காசாளருக்கு வழங்கப்படும்.
- மொத்த பெறுமதியானது சில்லறைக் காசு வசக்கட்டு எனப்பவதுடன் சில்லறைக் காசாளருக்கு வழங்கப்படும் செலவிட்ட தொகையானது கட்டுநிதி மீள் நிரம்பல் எனப்படும்.

**சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு**

| திகதி | விபரம் | கைச் சாத்து இர | பெறுமா னம் (ரூபா.) | பகுப்பாய்வு நிரலகள் | | | | ஏனை யவை (ரூபா.) | பே. ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | எழுது-கருவி (ரூபா.) | வாடகை (ரூபா.) | போக்கு வரத்து (ரூபா.) | நானாவித செலவு (ரூபா.) | | |
| | | | | | | | | | |

- ► பகுப்பாயவு நிரல்களுடனான சில்லறைக் காசேட்டில் சில்லறைச் செலவுகளின் கொடுப்பனவுகள் பதிவு செய்யப்படல் வேண்டும்.
- ► சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டிலும் பொதுப் பேரேட்டிலும் பதிவுகள் பின்வருமாறு கணக்கு வைக்கப்படும்.
  - சில்லறைக் காசு வசக்கட்டு கிடைக்கப் பெறல்
    சில்லறைக் காசுக் கணக்கு வரவு
    காசுக் கணக்கு செலவு
  - வசக்கட்டினை மீள்நிரப்பல்
    சில்லறைக் காசுக் கணக்கு வரவு
    காசுக் கணக்கு செலவு
  - சில்லறைக் செலவு ................. மொத்தம்
    குறித்த செலவுக் கணக்கு வரவு
    சில்லறைக் காசுக் கணக்கு செலவு

## Q வினா

கயனி வணிகத்தில் 2018 மார்ச் மாதத்தில் முதல் இரண்டு வாரத்தில் இடம் பெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாளேட்டை தயாரிப்பதுடன் பொதுப் பேரேட்டில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்க.

சில்லறைக் காசு வசக்கட்டு ரூ. 3,000/-

| திகதி **2018** | கைச்சாந்து இல | கயனி வணிகம் | ரூபா. |
|---|---|---|---|
| 04 மார்ச் | 01 | உபசரிப்பு செலவு | 300 |
| 05 மார்ச் | 02 | முத்திரை, கடிதவுறை | 280 |
| 06 மார்ச் | 03 | துப்பரவாக்கும் செலவு | 400 |
| 08 மார்ச் | 04 | தபால் கட்டணம் | 400 |
| 09 மார்ச் | 05 | வாடகை வாகணக் கட்டணம் | 350 |
| 10 மார்ச் | 06 | அமலுக்கு கொடுந்தது | 700 |
| 11 மார்ச் | 07 | துப்பரவாக்கும் செலவு | 250 |

# A விடை

**சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு**

| பெறுவனவு | திகதி | விபரம் | கைச்சாத்து இல | பெறுமானம் (ரூபா.) | பகுப்பாயவு நிரல்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உபசரிப்பு (ரூபா.) | அஞ்சல் (ரூபா.) | போக்குவரக்கு செலவு (ரூபா.) | துப்பரவு செய்தல் (ரூபா.) | ஏனையவை (ரூபா.) | பே. ப. |
| 3,000 | 1 ஏப்ரல் | காசு | | | | | | | | |
| | 4 மார்ச் | உபசரிப்பு | 01 | 300 | 300 | | | | | |
| | 5 மார்ச் | முத்திரை, கடிதவுறை | 02 | 280 | | 280 | | | | |
| | 6 மார்ச் | துப்பரலாக்கும் செலவு | 03 | 400 | | | | 400 | | |
| | 8 மார்ச் | தபால் கட்டணம் | 04 | 400 | | 400 | | | | |
| | 9 மார்ச் | வாகன வாடகை கட்டணம் | 05 | 350 | | | 350 | | | |
| | 10 மார்ச் | அமல் (கடல் கொடு.....) | 06 | 700 | | | | | 700 | 08 |
| | 11 மார்ச் | துப்பரவு செயதல் செலவு | 07 | 250 | | | | 250 | | |
| | | | | **2,680** | **300** | **680** | **350** | **650** | **700** | |
| | | | | | உபசரிப்புச் செலவுக் கணக்கிற்கு மாற்றியது (பே.ப. 20) | அஞ்சல் செலவிற்கு மாற்றியது (பே.ப. 21) | போக்குவரத்த செலவிற்கு மாற்றியது (பே.ப. 23) | துப்பரவுச் செலவுக் கணக்கிற்கு மாற்றியது (பே.ப. 24) | | |

சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்த கொடுக்கல் வாங்கலகள் பொதுப் பேரேட்டிற்கு பின்வரும்முறையில் மாற்றப்படும்.

**சில்லறைக் காசுக் கணக்கு**

(ரூபா.)

| | | | |
|---|---|---|---|
| 01 மார்ச் மீ.கீ.கொ.வ. | 3,000 | பலவேறுபட்ட செலவுகள் | 2,680 |
| | | மீ.கீ.கொ.செ. | 320 |
| | 3,000 | | 3,000 |
| மீ.கீ.கொ.வ. | 320 | | |
| காசுக் கணக்கு | 2,680 | | |

**காசுக் கணக்கு**

(ரூபா.)

| | | | |
|---|---|---|---|
| | | சில்லறைக் காசு | 2,680 |

**உபசரிப்புச் செலவு கணக்கு**

(ரூபா.)

| | | | |
|---|---|---|---|
| 15 மார்ச் சில்லறைக் காசு | 300 | | |

**துப்பரவாக்கும் செலவு கணக்கு**

| | | | (ரூபா.) |
|---|---|---|---|
| 15 மார்ச் சில்லறைக் காசு | 650 | | |

**அஞ்சல் செலவு கணக்கு** (ரூபா.)

| | | | |
|---|---|---|---|
| 15 மார்ச் சில்லறைக் காசு | 680 | | |

**கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு** (ரூபா.)

| | | | |
|---|---|---|---|
| 10 மார்ச் சில்லறைக் காசு | 700 | மீ.கீ.கொ.வ. | XXX |

**போக்குவரத்து செலவு கணக்கு** (ரூபா.)

| | | | |
|---|---|---|---|
| 15 மார்ச் சில்லறைக் காசு | 350 | | |

FAB
Association of Accounting Technicians of Sri Lanka

## 1.6 கொள்வனவு நாட்குறிப்பேடு

- மீள்விற்பனைக்குரிய பொருட்களின் கடன் கொள்வனவுகளைப் பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூல ஏடு கொள்வனவு நாட்குறிப்பேடு ஆகும்.
- கொள்வனவு நாட்குறிப்பேட்டிற்குரிய மூல ஆவணம் பட்டியல் (கொள்வனவுப் பட்டியல்) ஆகும்.
- மீள்விற்பனைக்குரிய பொருட்கள் கடனுக்கு கெள்வனவு செய்யப்படும் போது பொருட்களின் குறித்த விலையிலிருந்து குறிப்பிட்ட வீதமொன்று குறைக்கப்படுலதுடன் அது வியபாரக் கழிவு என அழைக்கப்படும்.
- வியாபாரக் கழிவானது பட்டியலில் மாத்திரம் குறைத்துக் காட்டப்படும். கணக்குகளில் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை.
- வணிகத்திற்குப் பொருட்களைக் கடனுக்கு வழங்கும் வழங்குனர்கள் வணிகத்தின் வியாபாரக் கடன் கொடுத்தோர்களாகக் கருதப்படுவதுடன், இக்கடன் கொடுத்தோர் தொகை நிறுவனத்திற்குப் பொறுப்பொன்றாகக் கருதப்படும்.
- VAT இற்கு பதிவு செய்யப்பட்ட வணிகமொன்றின் கொள்வனவு நாட்டுறிப்பேட்டிற்குரிய கொடுக்கல் லாங்கலகள் பொதுப் பேரேட்டில் பின்வரும் முறைகளில்.

| | | |
|---|---|---|
| கொள்வனவு கணக்கு | வரவு | XXXXX |
| *(கொள்வனவு நாட்குறிப்பேட்டின் பெறுமான நிரலின் மொத்தம்)* | | |
| VAT கணக்கு | வரவு | XXXXX |
|     கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | செலவு | XXXXX |

**கொள்வனவு நாட்குறிப்பேடு**

| திகதி **2017** | பட்டியல் இலக்கம் | வழங்குனர் | பெறுமானம் (ரூபா.) | **VAT** (ரூபா.) | மொத்தப் பெறுமானம் (ரூபா.) | பே. ப. |
|---|---|---|---|---|---|---|
| 01 மார்ச் | 264 | நெலும் அன்ட் கம்பனி | xx | xx | xxx | |
| 25 மார்ச் | 610 | தயா அன்ட் கம்பனி | xx | xx | xxx | |
| 31 மார்ச் | | பொதுப்பேரேட்டிற்கு மாற்றியது | **xx** | **xx** | **xxx** | |

- ஒவ்வொரு கொள்வனவு பெறுமானமும் பெறுமதி சேர் வரியும் (VAT) கடன் கொடுத்தோர் துணைப் பேரேட்டில் உரிய கடன் கொடுத்தோர் கணக்குகளக்கு தனித்தனியாக செலவு வைக்கப்படல் வேண்டும்.
- குறிப்பட்ட கால இறுதியில் கொள்ளனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் பொதுப் பேரேட்டின் கொள்வனவுக் கணக்கில் வாவு வைக்கப்பட வேண்டி இருப்பதுடன் VAT நிரலின் மொத்தம் VAT கணக்கல் வரவு வைக்கப்பட வேண்டும். பின்னர் VAT உள்ளடாகலாக மொத்த பெறுமானம் கடன் கொடுத்தோர் கட்டுப்பட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டல் வேண்டும்.

## 1.7 வெளித்திரும்பல் நாளேடு / நாட்டுறிப்பேடு

- கடனுக்கு கொள்வனவு செய்த பொருட்கள் பின்வரும் காரணங்களின் அடிப்படையில்
  - காலம் கடந்தவையாதல்
  - கட்டளையிட்ட வகைக்கு பொருத்தமற்றதாக இருத்தல்
  - சேதமுற்ற பொருள் காணப்படல்
  - காலதாமதமாக்க கிடைக்கப் பெறல்
- வெளித்திரும்பல்களைப் பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூலஏடு வெளித் திரும்பல் நாட்குறிப்பேடு ஆகும்.
- வெளித்திகுபல் நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செயவதற்குரிய மூல ஆவணம் வரவுத்தாளாகும்
- வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டின் மாதிரியை பின்வரும் முறையில் காட்டலாம்.

**வெளித்திரும்பல் நாளேடு**

| திகதி **2017** | வரவுத்தாள் இலக்கம் | வழங்குனர் | பெறுமா-னம் | **VAT** (ரூபா.) | மொத்தப் பெறுமா-னம் (ரூபா.) | பே. ப. |
|---|---|---|---|---|---|---|
| 05 மார்ச் | 15 | மானல் அன்ட் கம்பனி | xx | xx | xxx | |
| 29 மார்ச் | 16 | குமார அன்ட் கம்பனி | xx | xx | xxx | |
| 31 மார்ச் | | கொதுப்பேரேட்டுக்கு மாற்றியது | **xx** | **xx** | **xxx** | |

- ஒவ்வொரு திகதிகளினதும் தேறிய வெளித்திரும்பலின் பெறுமானம் கடன் கொடுத்தோர் துணைப்பேரேட்டிலுள்ள உரிய கடன் கொடுத்தோர் கணக்குகளில் தனித்தனியாக வரவு வைக்கப்படல் வேண்டும்.
- கால இறுதியில் வெளித்திரும்பல் நாளேட்டின் மொத்தப் பெறுமதியானது பொதுப் பேரேட்டிலுளின் வெளித்திடும்பல் கணக்கில் செலவு வைக்கப்படுவதுடன் VAT உரிய VAT பெறுமதியானது VAT

கணக்கில் செலவு வைக்கப்பல் வேண்டும். பின்னர் VAT உள்ளடங்கலான மொத்தப் பெறுமானமானது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

- VAT ற்கு பதிவு செய்யப்பட்ட வணிக மொன்றின் வெளித்திருமால் நாட்குறிப்டேட்டிற்குரிய கொடுக்கல் வாங்கலகள் பேரேட்டிற்டு பின்வரும் முறையில் மாற்றப்படும்.

| | | |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் கட்டுப்பட்டுக் கணக்கு | வரவு | XXX |
| *(VAT உள்ளடங்கிய மொத்தப் பெறுமானம்)* | | |
| வெளித்திரும்பல் கணக்கு | செலவு | XXX |
| (வெளித்திரும்பல் நாட்குறிப்பின் மொத்தம்) | | |
| VAT கணக்கு | செலவு | XXX |

## வினா

சிரிபால வணிகத்தின் 2018 ஏப்ரல் மாதத்திற்குரிய கொள்வனவு நாகுறிப்பேடு மற்றும் வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு பின்வருமாறு.

**கொள்வனவு நாட்குறிப்பேடு**

| திகதி **2018** | பட்டியல் இலக்கம் | வழங்குநர் | பெறுமானம் (ரூபா.) | பே.ப. |
|---|---|---|---|---|
| 05 ஏப்ரல் | 335 | ரமணி | 7,000 | |
| 08 ஏப்ரல் | 426 | தயா | 14,000 | |
| 12 ஏப்ரல் | 339 | தயா | 10,000 | |
| 18 ஏப்ரல் | 526 | கசுனி | 8,000 | |
| 25 ஏப்ரல் | 931 | அமாலி | 12,000 | |
| 30 ஏப்ரல் | பொதுப்பேரேட்டிற்கு மாற்றியது | | **51,000** | |

**வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு**

| திகதி **2018** | வரவுத்தாள் இலக்கம் | வழங்குநர் | பெறுமானம் (ரூபா.) | பே.ப. |
|---|---|---|---|---|
| 10 ஏப்ரல் | 01 | தயா | 4,000 | |
| 22 ஏப்ரல் | 02 | கசுனி | 1,800 | |
| 30 ஏப்ரல் | பொதுப்பேரேட்டிற்கு மாற்றியது | | **5,800** | |

**வேண்யபடுலது:**

மேற்கூறிய தகவல்களை உரிய திகதிகளில் பேரேட்டிற்கு மாற்றுக.

## 1.8 விற்பனை நாட்குறிப்பேடு

- மீள்விற்பனைப் பொருட்களின் கடன் விற்பனைகளைப் பதிவு செய்வதற்காகப் பேணப்படுகின்ற மூல ஏடு விற்பனை நாட்குறிப்பேடு / விற்பனை நாளேடு எனப்படும்.
- விற்பனை நாட்குறிப்பேட்டிற்ருரிய மூல ஆலணம் விற்பனைப் பட்டியல் எனப்படும்.
- பொருட்களை கடனுக்கு விற்பனை செய்யப்படும்போது பொருட்கள் குறிப்பட்ட விலையிலிருந்து குறிப்பிட்ட வீதமொன்று குறைக்கப்படுமாயின் அது வியாபாரக் கழிவு என அழைக்கப்படும்.

- வியாபாரக் கழிவானது பட்டியலில் மாத்திரம் குறைத்துக் காட்டபடும். கணக்குகனில் பதிவுகள் மேற்கொள்ளப்படுலதில்லை.
- வணிகம் கடனுக்குப் பொருட்களை விற்பனை செயயும் போது வியாபாரக் கடன்பட்டோர் உருவாகுவதுடன் அக்கடன்பட்டுநார் நிறுவனத்திற்குச் சொத்தொன்றாக்க கவனத்தில் கொள்ளப்படும்.
- VAT ற்குப் பதிவு செய்யப்பட்ட வணிகமொன்றின் விற்பனை நாளேட்டின் கொடுக்கல் வாங்கல்கள் பேரேட்டிற்கு பின்வரும் முறையில் மற்றப்படும்.

கடன்பட்டோர் கட்டுப்பட்டுக் கணக்கு வரவு XXX
*(VAT உள்ளிட்ட மொத்தப் பெறுமானம்)*
VAT கணக்கு செலவு XXX
*(VAT நிரலின் மொத்தம்)*
விற்பனை கணக்கு செலவு XXX
*(விற்பனை நாளேட்டு பெறுமான நிரலின் மொத்தம்)*

VAT இற்குப் பதிவு செய்யப்பட்ட வணிகமொன்றின் விற்பனை நாட்குறிப்பேட்டின் மாதிரியிமைப்பு பின்வருமாறு:

**விற்பனை நாட்குறிப்பேடு**

| திகதி **2018** | பட்டியல் இலக்கம் | வழங்குநர் | பெறுமா-னம் (ரூபா.) | **VAT** (ரூபா) | மொத்தப் பெறுமானம் (ரூபா) | பே. ப. |
|---|---|---|---|---|---|---|
| 01 ஏப்ரல் | 631 | சரத் ட்ரேடர்ஸ் | XX | XX | XXX | |
| 20 ஏப்ரல் | 632 | விமல் அன்ட் சகோதராகள் | XX | XX | XXX | |
| 30 ஏப்ரல் | | பொதுப்பேரேட்டிற்கு மாற்றியது | **XX** | **XX** | **XXX** | |

- உரிய திகதிகளில் பட்டியலின் பெறுமானம் மற்றும் VAT பெறுமானம் என்பன் கடன்பட்டோர் துணைப் பேரேட்டிலுள்ள உரிய கடன்பட்டோர் கணக்குகளில் தனித்தனியாக வரவு லைக்கப்படும்.
- கால இறுதியில் விற்பனை பெறுமான நிரலின் மொத்த தொகை கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதியப்படுவதுடன் விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்படும்.
- VAT நிரவின் தொகை கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதியப்படுவதுடன் அட்டுறு VAT கணக்கில் செலவில் வைக்கப்படும்.

## 1.9 உட்திரும்பல் நாட்குறிப்பேடு

- கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் பின்வரும் காரணங்களினால் வாடிக்கையானரினால் திருப்பி அனுப்பப்படும்.
  - காவாவதியாகுதல்
  - கட்டளைக்குப் பொருத்தமற்ற பொருட்களை அனுப்பியிருத்தல்
  - பொருட்கள் சேதமடைந்திருத்தல்
- உட்திரும்பலகளைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூலஏடு உட்திரும்பல் நாட்குறிப்பேடு ஆகும்.

- உட்திரும்பல் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு அபிப்படையாகக் கொள்ளப்படும் மூல ஆவணம் செலவுத்தாள் ஆகும்.
- VAT இற்குப் பதிவு செய்யப்பட்ட வணிகமொன்றின் உட்திரும்பல் நாட்குறிப்பேட்டின் மொத்தமானது பின்வருமாறு பொதுப் பேரேட்டிற்கு மாற்றப்படும்.

உட்திரும்பல் கணக்கு வரவு XXX
*(மெறுமான நிரவின் மொத்தம்)*
VAT கணக்கு வரவு XXX
*(VAT நிரவின் மொத்தம்)*
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கு செரவு XXX
*(VAT உட்பட்ட மொத்தப்பெறுமான நிரவின் மொத்தம்)*

- VAT இற்குப் பதிவு செய்யப்பட்ட வணிகமொன்றின் உட்திரும்பல் நாட்குறிப்பேட்டின் மாதிரியை பின்வரும் முறையில் காட்டலாம்.

**உட்திரும்பல் நாட்குறிப்பேடு**

| திகதி **2018** | செலவுத் தாள் இலக்கம் | கொள்வனவாளர் | பெறுமானம் (ரூபா.) | **VAT** (ரூபா) | மொத்தப் பெறுமானம் (ரூபா) | பே. ப. |
|---|---|---|---|---|---|---|
| 06 ஏப்ரல் | 15 | சரத் ட்ரேடர்ஸ் | xx | xx | xxx | |
| 25 ஏப்ரல் | 16 | விமல் அன்ட் சகோதராகள் | xx | xx | xxx | |
| 30 ஏப்ரல் | | பொதுப்பேரேட்டிற்கு மாற்றியது | **xx** | **xx** | **xxx** | |

- உரிய திகதிகளில் உட்திரும்பல்களின் பெறுமதிகளும் VAT பெறுமதிகளும் கடன்பட்டோர் பேரேட்டிலுள்ள உரிய கடன்பட்டோர் கணக்குகளில் தனித்தனியாகக் செலவில் பதியப்படும்.
- குறிந்த கால இறுதியில் உட்திரும்பலின் பெறுமான நிரலின் தொகை பொதுப் பேரேட்டின் உட்திருமால் கணக்கில் வரவிலும் VAT நிரலின் தொகை VAT கணக்கின் வரவிலும் பதியப்படும். VAT உள்ளடங்கலாக மொத்தப் பெறுமானம் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவில் பதியப்படும்.

## வினா

| திகதி | விபரம் |
|---|---|
| 04/04/2018 | பட்டியல் இல 201 இன் கீழ் சமனிற்கு விற்பனை ரூபா. 130,000/- |
| 08/04/2018 | பட்டியல் இல. 202 கீழ் மயுரிக்கு விற்பனை ரூபா. 145,000/- |
| 10/04/2018 | பட்டியல் இல 203 கீழ் மாவிக்கு விற்பனை ரூபா. 128,000/- |
| 15/04/2018 | 10.04.2018 இல் மாவிக்கு விற்பனை செய்த சகல பொருட்களும் கோரப்பட்ட பொருளைவிட வித்தியாசப்பட்டமையினால் திருப்பி அனுப்பபட்டண. (செலவுத்தாள் இல 20) |
| 20/04/2018 | பட்டியல் இல 204 இன் கீழ் மாவாவிற்கு விற்பனை ரூபா. 136,000/- |
| 25/04/2018 | 20.04.2018 இல மாலா ரூ. 8,000 பெறுமதியான பண்டங்களை காலாவதியாகியமையால் திருப்பி அனுப்புதல் (செலவுத்தாள் இல 21) |

**வேண்டப்படுவது:**

1. விற்பனை நாட்குறிப்பேடும், உட்திரும்பல் நாட்குறிப்பேடும்.
2. உரிய பேரேட்டுக் கணக்குகள் (பொதுப் பேரேடு மற்றும் கடன்பட்டோர் பேரேடு)

## 1.10 பொது நாட்குறிப்பேடு

- விசேட நாட்குறிப்பேடுகளில் பதிவு செய்யப்பட முடியாத கொடுக்கல் வாங்கல்ளைப் பதிவு செய்யும் மூல ஏடு பொது நாட்குறிப்பேடு என எழைக்கப்படும்.
- பொது நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பிரதான மூல ஆவணம் நபட்குறிப்புக் கைச்சாத்தாகும்.
- பொது நாட்குறிப்பேட்டின் மாதிரி பின்வருமாறு:

**பொது நாட்குறிப்பேடு**

| திகதி | கைச்சாத்து இலக்கம் | விபரம் | பே. ப. | வரவு (ரூபா.) | செலவு (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| ......20 | | .......................... கணக்கு<br>(வரவு வைக்கப்பட வேண்டியது)<br>................... கணக்கு<br>(செலவு வைக்கப்பட வேண்டியது)<br><br>(விளம்பல்) | | xx | <br>xx |

- பொது நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் பொழுது அக் கொடுக்கல் வாங்கலகள் இரட்டைப் பதிவு முறையில் காட்டப்படும்.
- அக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய காரணச் சுருக்கமானது விளம்பல் என அழைக்கப்படும்.
- பின்வரும் கொடுக்கல் வாங்கல் வகைகள் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்.
  - தொடக்கப் பதிவுகள்
  - செம்மையாக்கல் பதிவுகள்
  - வழுக்களைச் சீராக்கும் பதிவுகள்
  - ஆதனம், பொறி, உபகரண கடன் கொன்வனவு, கடன் விற்பனை மற்றும் அகற்றல் / கைமாற்றுல் தொடர்பான பதிவுகள்
  - மூடும் பதிவுகள்
  - பேரேட்டுக்கு மாற்றும் பதிவுகள்
  - ஏனைய பதிவுகள்

## வினா

சந்தவியின் வணிகத்திற்குரிய பின்வரும் தகவலகள் உங்களுக்கு தரப்பட்டுளனை.

(i) 2018.04.01 ஆம் திகதியில் மீதிகள்

| | ரூபா. |
|---|---:|
| இயந்திரம் | 300,000 |
| தளபாடம் | 50,000 |
| சரக்கிருப்பு | 25,000 |
| காசு | 40,000 |
| கடன்பட்டோர் | 35,000 |
| கடன்கொடுத்தோர் | 60,000 |
| மூலதனம் | ? |

(ii) அலுவலக உபயோகத்திற்காக ரூ.16,000/- பெறுமான முடைய தளபாடங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.

(iii) ரூ.18,000/- கிரயான இயந்திரமானது ரூ. 20,000/- க்கு சகானிற்கு விற்பனை செய்யப்பட்டது.

(iv) அலுவலக பராமரிப்பு செலவின கொடுப்பனவு ரூபா. 8,000/- பொதுச் செலவுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**

1. பொது நாட்குறிப்பேடு
2. உரிய பேரேட்டுக் கணக்குகள்

என்பவற்றைத் தயாரிக்குக.

## 2 ஏனைய ஆதார ஆவணங்கள்

### 2.1 கொள்முதற் கட்டளை

கொள்முதல் செய்பவரால் வகை, அளவு மற்றும் குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகள் காசு இணங்கிய விலைகள் ஆகியனவற்றை குறிப்பிட்டு வழங்கப்படும் முதற் வியாபார ஆவணம் கொள்முதற் கட்டளையாகும். ஒரு கொள்முதற் கட்டளையில் ஏற்றுக்கொள்ளல் / கொள்முதல் செய்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படும். கொள்முதற் கட்டளையை ஏற்கும் வரையில் அவர்களுக்கு இடையில் ஒப்பந்தம் ஏற்படாது. வெளியார் வழங்குனரிடமிருந்து பொருட்கள் சேவைகள் கொள்முதல் செய்வதை கட்டுப்படுத்துவதற்கு பிரயோகிக்கப்படும்.

## 2.2 பொருட்கள் பெறுகைசீட்டு

பெறும்போது பொருட்கள் பெறுகையை பதிவுசெய்யப்படுவதற்கு பயன்படுத்தும் ஆவணம். இது எல்லா பொருட்களும் பெற்றதை உறுதிப்படுத்துவதற்கு பிரயோகிக்கப்படும் ஆவணம். இது கொடுப்பனவு செய்யமுன் கொள்முதற் கட்டளையுடன் ஒப்பிட்டு பார்க்கப்படும்.

வளங்குனரிடமிருந்து பொருட்களை பெறும்போது கொள்முதல் செய்பவரின் களஞ்சிய முகாமையாளரால் வழங்கப்படும் ஆவணம் பொருட்கள் பெறுகைச் சீட்டாகும். இந்த ஆவணம் உள்ளகப்பாவனைக்கு தயாரிக்கப்படும். அது மூன்று நகலுடன் தயாரிக்கப்படும். இப் பெறுகைச்சீட்டு மூன்று அல்லது கூடிய எண்ணிக்கை நகல்களுடன் தயாரிக்கப்பட்டு ஒன்று களஞ்சியத்தில் வைத்துக் கொண்டு இன்னொன்று கணக்கீட்டுப்பகுதிக்கு அனுப்பப்படும். இருப்பு கட்டுப்படுத்தும் நடவடிக்கையின்போது பொருட்கள் பெறுகைச்சீட்டு களஞ்சிய பேரேட்டில் பதிவுசெய்வதற்கான அடிப்படை ஆவணமாகும்.

## 2.3 பொருட்கள் கோரும்சீட்டு

ஒரு நிறுவனத்தின் களஞ்சியத்தினால் ஒரு குறிப்பிட்ட பொருளின் அளவினை வைத்திருக்கும் நோக்குடன் தயாரிக்கப்படும் ஆவணம். இந்த ஆவணம் பொதுவாக கொள்முதற் பகுதிக்கு பொருட்கள் கொள்முதல் செய்வதற்காக அனுப்பப்படும். களஞ்சியப்பகுதி ஒரு சுமூகமான உற்பத்தி நடவடிக்கையை மேற்கொள்ளும் முகமாக கொள்முதல் செய்வதற்காக கொள்முதற்பகுதிக்கு அறியத்தரும் உள்ளக ஆவணமாகும்.

## 2.4 சம்பளப்பட்டியல்

சம்பளப்பட்டியல் ஊழியரின் எண்ணிக்கையையும் அவர்களுக்கு எவ்வளவு கொடுப்பனவு செய்வது என்பதையும் பதிவுசெய்யும் ஆவணம். ஒரு கம்பனியில் சம்பளங்கள் கூலிக்கொடுப்பனவுகள், பணிக்கொடுப்பனவுகள், ஊழியர் நலநிதியத்திற்கான ஊழியரின்பங்களிப்பு, சம்பளமுற்பணம் ஆகியவற்றை பதிவுசெய்யப்படும் நிதிசார் ஆவணமாகும். கணக்கீட்டு பார்வையில் சம்பளப்பட்டியல் ஊழியருக்கு வழங்கும் தொகையைக் குறிக்கும் ஆவணமாகும். இன்றைய நிலையில் சம்பளக்கொடுப்பனவு செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமான கணக்கீட்டை மேற்கொள்ளப்படும் நோக்குடன் தானே இயங்கும் தகவற்தொழில்நுட்ப உதவியுடன் செயற்படுத்தப்படுகின்றது.